

துணை முதலமைச்சரும், தி.மு.கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்ற, சமூகநீதி எழுத்தாளரும், திராவிட இயக்கச் சிந்தனையாளருமான மறைந்த சு.விஜயபாஸ்கர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில், அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருமதி காயத்ரி விஜயபாஸ்கர், திராவிடர் கழக பிரச்சாரக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.கழக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், மார்க்சீய பெரியாரிய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, புதிய குரல் அமைப்பின் நிறுவனர் ஓவியா, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் மனுஷ்யப்புத்திரன், பேராசிரியர் கருணானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சரும், தி.மு.கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்ற, சமூகநீதி எழுத்தாளரும் திராவிட இயக்கச் சிந்தனையாளருமான மறைந்த சு.விஜயபாஸ்கர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் "விஜயபாஸ்கர் அறக்கட்டளையை தொடங்கி வைத்து, கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், விஜயபாஸ்கரின் இணையர் திருமதி காயத்ரியிடம் ரூ.5 இலட்சத்துக்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழக பிரச்சாரக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.கழக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், மார்க்சீய – பெரியாரிய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, புதிய குரல் அமைப்பின் நிறுவனர் ஓவியா, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் மனுஷ்யப்புத்திரன், பேராசிரியர் கருணானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சமூக அக்கறையுள்ள நூறு விஜயபாஸ்கர்களை உருவாக்குவதே

# அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

## சமூகநீதி எழுத்தாளர் மறைந்த சு.விஜயபாஸ்கர் படத்திறப்பு நிகழ்ச்சியில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல் உரை!



**சென்னை,ஆக.10-**

**சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில், சமூகநீதி எழுத்தாளர் - திராவிட இயக்கச் சிந்தனையாளரும் முரசொலி பாசறைப் பக்கத்தில் 'எல்லோருக்கும் எல்லாம்' தொடரை எழுதியவருமான மறைந்த சு.விஜயபாஸ்கர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.**

**நிகழ்ச்சியில் அவரது இணையர் காயத்ரி மற்றும் நண்பர்கள் முன்னெடுப்பிலான 'விஜயபாஸ்கர் அறக்கட்டளை'யையும் தொடங்கி வைத்து, கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், விஜயபாஸ்கரின் இணையர் காயத்ரியிடம் ரூ.5 இலட்சத்துக்கான காசோலையையும் வழங்கினார்.**

**படத்திறப்பு நிகழ்ச்சியில் பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ``விஜயபாஸ்கருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி, அவரைப் போல சமூக அக்கறையுள்ள இன்னும் பல நூறு விஜயபாஸ்கர்களை உருவாக்குவதே' என்று உரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-**

அன்புச் சகோதரர் திராவிட இயக்க எழுத்தாளர் சகோதரர் விஜயபாஸ்கர் அவர்களின் நினைவாக அவருடைய திருவுருவப்படத்தை இன்றைக்கு இங்கே திறந்து வைத்திருக்கிறோம். அதேபோல் அவர் பெயரிலான அறக்கட்டளையை அவர் குடும்பத்தினர்கள், நண்பர்கள் சார்பாகவும் திறந்து வைக்கின்ற வாய்ப்பையும் பெற்று இருக்கிறோம்.

### ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

சகோதரர் விஜயபாஸ்கர் அவர்களின் இழப்பு வலியை, உங்கள் அனைவரின் முகத்திலும் என்னால் பார்க்க முடிகிறது. உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் அந்த பாதிப்பு இருக்கிறது. குறிப்பாக எனக்கும், இளைஞர் அணிக்கும், முரசொலிக்கும் சகோதரர் விஜயபாஸ்கரின் மரணம் என்பது தனிப்பட்ட முறையில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

சகோதரர் விஜயபாஸ்கர் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெறுகிற சில நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொள்ள வேண்டும் என்று என்னிடத்தில் ஓரிரு முறை தேதி கேட்டிருந்தார். அவர் நடத்துகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்க வேண்டிய நான், இன்று அவரின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன். அதை நினைத்துப் பார்க்கும் போதே, என்னால் சொல்ல முடியாத அளவுக்கு வேதனையாக இருக்கிறது.

### தூத்துக்குடி மாவட்டம்

தன்னுடைய சிந்தனை மற்றும் எழுத்தாற்றலால் மிகப்பெரிய விஷயங்களை எல்லாம் மிகச்சிறிய வயதிலேயே செய்தவர்தான், சகோதரர் விஜயபாஸ்கர் அவர்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து, தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவர்.

தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கர் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் - நம் கழகத்தலைவர் அவர்கள் மீது பெரும் பற்று கொண்டிருந்தவர். என் மீதும் அளவு கடந்த பாசத்தையும், அன்பையும் கொண்டிருந்தார். சிங்கப்பூரில் அவர் பணியாற்றியபோது பெரியார் - அம்பேத்கர் வாசகர் வட்டத்தை உருவாக்கி, பல நிகழ்ச்சிகளை அவர் நடத்தி இருக்கிறார். திராவிட இயக்கத்தில் மிகச் சமீபத்தில் மிக முக்கியமான எழுத்தாளராக திகழ்ந்தவர்தான் நம் அருமைச் சகோதரர் விஜயபாஸ்கர் அவர்கள்.

நேற்று முன்தினம் கூட, கலைஞர் அவர்களின் நினைவு நாளன்று இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில், நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட 8 புத்தகங்களில் சகோதரர் விஜயபாஸ்கர் அவர்களின் புத்தகமும் மிகமிக முக்கியமான புத்தகமாக இருந்தது. 'இந்தியாவில் சமூகநீதியும் இடஒதுக்கீடும்' என்கிற அந்தப் புத்தகத்தை, இளைஞர் அணி பயிற்சிப் பாசறை நிகழ்ச்சிக்காக அவர் எழுதி இருந்தார்.

### இயக்கம், இட ஒதுக்கீடு!

அவருடன் எப்போது பேசினாலும், சுயமரியாதை இயக்கம், இட ஒதுக்கீடு, திராவிட இயக்க வரலாறு என்பதை மட்டும்தான் என்னிடத்தில் பேசி இருக்கிறார். பேசியதுடன் மட்டுமில்லை, பெண் எனும் பிள்ளைபெறும் கருவி, பாலஸ்தீனம் முதல் இஸ்ரேல் வரை போன்ற முக்கியமான நூல்களை எழுதியவர், எனக்கும் அதை பரிசாக அளித்தவர்தான் விஜயபாஸ்கர் அவர்கள்.

2019-ஆம் ஆண்டு ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு, உயர் சாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் 10 சதவிகித (EWS 10%) இட ஒதுக்கீட்டை வழங்கியது. அதை 2022-இல் உச்சநீதிமன்றம் செல்லும் என உத்தரவிட்டது. இந்தியாவின் பெரும்பான்மை மக்களைப் பாதிக்கக்கூடிய அந்தத் தீர்ப்பைத் தொகுத்து 'உயர் சாதியினருக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா? தவறா? என்ற முக்கியமான நூலை உருவாக்கியவர்தான் சகோதரர் விஜயபாஸ்கர் அவர்கள்.

அந்த நூலுக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நமது ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்களும் அணிந்துரை எழுதி இருந்தார்கள். நாங்கள் இளைஞர் அணியின் 'முரசொலி' பாசறைப் பக்கத்தைத் தொடங்கியபோது, அந்தப் பக்கத்துக்கு விஜயபாஸ்கர் ஆற்றிய பங்களிப்பை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது.

### எல்லோருக்கும் எல்லாம்

2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முரசொலி பாசறைப் பக்கத்தில் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற தலைப்பிலே தொடர் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார். சுமார் 58 வாரங்களுக்கு அந்தத் தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைகள், இந்தியாவின் இட ஒதுக்கீடு வரலாற்றை, அனைவரும் புரிந்து கொள்கிற வகையில் இருந்தன.

இந்தத் தொடர் முதலில் கால் பக்க அளவுக்குத்தான் வெளிவந்தது. ஆனால், நேரிலும், சமூக வலைதளங்களிலும் அதற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. பல நேரங்களில் அது நம் கழகத் தலைவரின் கவனத்துக்கும் சென்றது. ஆகவே, கால் பக்கமாக வெளியான அந்தக் கட்டுரையை அரைப்பக்கம் அளவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தலைவர் அவர்களே உத்தரவிட்டார்கள். அதன்படி, அந்தக் கட்டுரைகள், தொடர்ந்து அரைப் பக்கத்துக்கு வெளியாகி பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின.

அதுமட்டுமல்ல, இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியை கடந்த ஆண்டு நடத்தினோம். அப்போது அதற்காக தமிழ்நாடு முழுக்க பயணித்து நடுவராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

### நடுவராக சிறப்புப் பணி

குறிப்பாக, இறுதிப்போட்டியில் நடுவராக சிறப்பாகப் பணியாற்றியதற்காக பாராட்டுச் சான்றிதழை அவருக்கு என் கையால் நானே அவருக்குக் கொடுத்தேன்.

சாதி, மத கட்டமைப்புக்கு எதிராக வலுவான சிந்தனையைக் கொண்டிருந்தார். அதே உறுதியோடு, பல்வேறு போராட்டங்களைக் கடந்து தன்னுடைய இணையர் சகோதரி காயத்ரி அவர்களை சாதி மறுப்புத் திருமணமும் செய்து கொண்டார். சகோதரி காயத்ரி அவர்களும் நம் கழகக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதால், சகோதரர் விஜயபாஸ்கரின் கொள்கைப் பணி - எழுத்துப் பணிக்கு அவரும் முழுமையாக துணை நின்றார். விஜயபாஸ்கர் அவர்கள் தன் மூச்சை மட்டுமே நிறுத்திக் கொண்டாரே ஒழிய, அவர் மனதில் எரிந்து கொண்டிருந்த சமூகநீதி நெருப்பை நமக்கு கடத்திவிட்டு சென்றிருக்கிறார்.

இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு விஜயபாஸ்கர் அவர்கள் ஒரு நல்ல முன்மாதிரி. ஓர் இளைஞராக சமூக மாற்றத்தைக் காண விரும்பியவர். அதற்காக தன்னால் முடிந்த முயற்சிகள் அத்தனையும் எடுத்தவர். இன்றைக்கு விஜயபாஸ்கர் அவர்களின் இணையர் சகோதரி காயத்ரி மற்றும் அவரின் நண்பர்கள் எல்லாம் சேர்ந்து, அதே இலட்சியத்துடன் ஓர் அறக்கட்டளையைத் தொடங்கி இருக்கிறார்கள்.

ஓர் இயக்கம் அறக்கட்டளையைத் தொடங்குவதை விட, தனி மனிதர்களாக அறக்கட்டளையைத் தொடங்குவது ஒரு சாதாரண விஷயம் கிடையாது. சகோதரர் விஜயபாஸ்கர் பெயரில் தொடங்கப்பட்டுள்ள அந்த அறக்கட்டளை, திராவிட இயக்க எழுத்தாளர்களை, ஆய்வாளர்களை நம் தமிழ்ச் சமூகத்திற்கு தர இருக்கும் மிகமிக முக்கியமான முன்னெடுப்பு. இந்தப் பணிகளை மேற்கொள்ளும் சகோதரர் விஜயபாஸ்கர் அவர்களின் குடும்பத்துக்கு, கழகம் என்றும் துணை நிற்கும்.

### 100 விஜயபாஸ்கர்கள்

இந்த நேரத்தில் விஜயபாஸ்கர் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலி என்பது அவரைப்போல இன்னும் 100 விஜயபாஸ்கர்களை நாம் உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். அதற்கான பணிகளை நானும், இளைஞர் அணியும் நிச்சயம் செய்வோம். அதேபோல் இங்கு வருகை தந்துள்ள நீங்களும் பல விஜயபாஸ்கர்களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சகோதரர் விஜயபாஸ்கர் அவர்களின் பணிகளைப் போற்றுவோம். அவரின் எழுத்துகளைப் பரப்புவோம். விஜயபாஸ்கரின் புகழ் ஓங்கட்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

திராவிடர் கழக பிரச்சாரக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் வில்சன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தி.மு.கழக மாவட்டச் செயலாளர் சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், மார்க்சீய - பெரியாரிய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, புதிய குரல் அமைப்பின் நிறுவனர் ஓவியா, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் மனுஷ்யப்புத்திரன், பேராசிரியர் கருணானந்தம், மருத்துவர் யாழினி, மருத்துவர் ஹபீஸ், தமிழ் காமராசன், பத்திரிகையாளர்கள் சுகுணாதிவாகர், நீரை மகேந்திரன், கழக பகுதிக் கழகச் செயலாளர் மா.ப.அன்புதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த மணியம்மை, செல்லையா, பூவண்ணன், விஜயபாஸ்கர் அவர்களின் இணையர் காயத்ரி, அவரின் மூத்த சகோதரி விஜயலட்சுமி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு வன்னியபுரம் திருவள்ளுவர் சாலையில் நடைபெற்ற 123 வது வட்டக் கழக செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம் சி. முன்னலையில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## 11–ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு ரத்து அறிவிப்பு!

# மாணவர்களை மன உளைச்சலில் இருந்து காப்பாற்றியுள்ளார் முதல்வர்!

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்பு!

சென்னை,ஆக.10-

மாநில கல்விக் கொள்கையின் முக்கிய அம்சமாக 11ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு ரத்து என்ற அறிவிப்பு மாணவர்களை மன உளைச்சலில் இருந்து காப்பாற்றியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் வரவேற்று அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை மாநில உரிமைகளைப் பறிக்கின்ற இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளைத் தினிக்கின்ற சர்வாதிகார கொள்கையாகவே உள்ளது , இதனால் மாநில மொழிகளை அழித்து இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளை தினித்து உள்ளது. அதாவது தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையைக் கொண்டுவந்து அதன் மூலமாகக் கல்வி வளர்ச்சியை அழிக்க நினைத்து செயல்படுத்த துடித்து, தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய நிதியை கூட கொடுக்க மறுத்து வருகிறது. இந்த சூழ்நிலையில் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த ஒரு



சூழ்நிலையிலும் மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என சூளுரைத்து ரூ 2153 கோடி மட்டுமல்ல எத்தனை ஆயிரம் கோடியை நிறுத்தினாலும் ங்கள் தாய் மொழியான தமிழ் மொழியை அழிக்க நினைக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரான தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக ஏற்க மாட்டேன் என உறுதி பட தெரிவித்து நம் இனம் காத்து வருகிறார்.

இந்த நிலையில் தான் ஏன் நாம் மாநில கல்விக் கொள்கையை கொண்டுவரக் கூடாது என எண்ணி , சமூக நீதி காக்க சமத்துவத்தை நிலைநாட்ட பெயர் அளவில் சமூக நீதி என்றில்லாமல் இது திராவிட மாடல் ஆட்சி என்பதை பறைச்சாற்றும் விதமாக மாநில கல்விக் கொள்கையைக் கொண்டுவர டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மதிப்புமிகு முருகேசன் அவர்களின் தலைமையில் 2022 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்வியாளர்கள், பேரறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் பல்வேறு அமைப்புகளிடம் அறிக்கையை கேட்டு அவர்களின் அறிக்கைகளை ஒருங்கிணைத்து அறிக்கையை ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பி பார்க்க செய்துள்ள மாநில கல்விக் கொள்கையின் அறிக்கையை இந்தியாவின் முதன்மை முன்னோடி முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு வரலாறு படைத்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையின் மூலம் மத சாயத்தையும், குலக் கல்வியைக் கொண்டுவந்து ஒட்டுமொத்த சமூக நீதியையும் அரசியல் அமைப்பையும் சிதைத்து மும்மொழி கொள்கையை கொண்டு வந்து சமஸ்த்கிருத மொழியையும் திணித்து மாநில மொழிகளை அழித்து ஒழிக்கும் செயலாகும். உதாரனமாக இந்தியை திணித்து இராஜஸ்தான், மகராஸ்டிரா போன்ற மாநிலங்களில் தாய்மொழியை அழிந்து வருவதை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது. இந்த நிலையை அறிந்த தான் மாநில கல்விக் கொள்கையை கொண்டுவந்துள்ளார் 3ஆம் 5ஆம் 8ஆம் வகுப்புகளில் மாணவர்களுக்கு பொது தேர்வு என்பது மாணவர்களின் இடை நிற்றலை அதிகப்படுத்தும் அதேபோன்று ஏற்கனவே 10ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு இடையில் உள்ள 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி அளவில் தேர்வு நடை என இருந்ததைச் சென்ற ஆட்சியாளர்கள் தேசிய கல்விக் கொள்கையை பின்பற்றி 11ஆம் வகுப்பிற்கும் பொது தேர்வு என அறிவித்து தொடர்ந்து 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் என தொடர்ச்சியாக மூன்று பொதுத் தேர்வை சந்தித்து வருகின்றனர். மாணவர்கள் இதனால் மாணவர்கள் தொடர்ந்து மன உளைச்சலால் அவதிப்பட்டு வருகின்றனர் இந்த நிலை அறிந்து மாணவர்கள் நலன் அறிந்து எப்படி மாணவர்கள் காலையில் உணவுக் கூட அருந்தாமல் பள்ளிக்கு வருகிறார்களே என வேதனைப்பட்டு ஒன்று முதல் 5ஆம் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை அறிவித்து தாய்க்கு தாயாகவும், தந்தைக்கு தந்தையாகவும் காலை உணவு வழங்கி வருவதை போன்று 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் கல்வியில் பாதிப்பு அடைந்த மாணவர்கள் இடைநிற்றலை தவிர்க்க இல்லம் தேடிக் கல்வி , மாணவர்கள் மேற்படிப்பு பயில நான் முதல்வன், புதுமை பெண் திட்டம் , நான் புதல்வன் கல்லூரி கனவு , உயர் கல்விக்கு வழி காட்டி , திறன் திட்டம் இது போன்ற ஏழை மாணவர்களை மேம்படுத்த இதுபோன்ற பெருந்திட்டங்களை திட்டங்களை செயல்படுத்தி வருகிறாரோ அதே சூழ்நிலையில் தான் இன்று 11ஆம் பொது தேர்வை நடப்பாண்டில் இருந்தே ரத்து செய்து மாணவர்கள் நலன் காத்துள்ளீர்கள மேலும் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையில் 3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு 8ஆம் வகுப்பிற்கு பொது தேர்வு என இருந்ததை கைவிட்டு எட்டாம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி என அறிவித்திருப்பதும் , மேற்படிப்பிற்கான நீட் உள்ளிட்ட அனைத்து போட்டித் தேர்வும் கூடாது என பரிந்துரை செய்துள்ளதும் சமத்துவத்தையும் சமூகநீதியையும் பறைச்சாற்றி மாநில கல்விக் கொள்கையின் அறிக்கையை வெளியிட்டுள்ளார்

சரித்திர வரலாற்றை நிகழ்த்திய இந்தியாவின் முன்னோடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் நீதியரசர் மதிப்புமிகு முருகேசன் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பாராட்டுதலையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.